ராணி காமிக்ஸ்
முகமூடி வீரர்
மாயாவி
தோன்றும்
கூலிப் படை
குணா கரூர்
படக்கதை பகிர்வுகள்

ராணி காமிக்ஸ் - 272
(மாதம் இருமுறை இதழ்)
அக்டோபர் 16 — 31
1995

படக்கதை பகிர்வுகள்
குணா கரூர்

முகமூடி வீரர்
மாயாவி
தோன்றும்

கூலிப்படை

ஒரு நாள் பெங்காலியாவிற்கு அருகில் உள்ள காட்டுக்குள் ஒரு வேன் விரைந்து வந்து கொண்டிருந்தது.
அதைப் பார்த்த காட்டுவாசி ஒருவன் மாயாவியிடம் தகவல் தெரிவிக்க அடர்ந்த காட்டுக்குள் ஓடிவந்தான். அடர்ந்த காட்டுக்குள் காவல் இருந்த குள்ளர்கள் விஷ அம்புகளுடன் அவனை எதிர்நோக்கினார்கள்.
நான் இலங்கோ கிராமத்தில் இருந்து வருகிறேன். மாயாவியை பார்க்க வேண்டும்!
உடனே குள்ளர்கள் இரகசிய பாதை வழியாக அவனை அழைத்துப் போனார்கள்.
காட்டுவாசி மாயாவியை சந்தித்தான். அவனுக்கு மூச்சிரைத்தது.
முதலில் தண்ணீர் குடித்து ஆசுவாசப் படுத்திவிட்டு பிறகு சொல்!
அதிக தூரம் ஓடிவந்ததால் மூச்சு இரைக்கிறது

மற்றவர்களும் அந்த வேனைப் பார்த்தார்கள்.
அந்த வேன் மாயாவியின் மலை முகட்டுக்கு அருகே வந்து நின்றது.
நீ பார்த்தது யானை அளவுக்கு பெரிதாக இருந்ததா?
ஆமாம்! அதற்கு சக்கரங்கள் கூட இருந்தன!
வந்தவன் வேன் நிற்கும் இடத்திற்கு மாயாவியை அழைத்துச் சென்றான்.
அதோ அதுதான்!
ஒரு மனிதனும் இருக்கிறான்! அவனுக்கு இங்கே என்ன வேலை?

இது சரக்கு ஏற்றிச் செல்லக்கூடிய பெரிய வாகனமாச்சே! அதற்கு காட்டுக்குள் என்ன வேலை?
அதுதானே?
நாம் இங்கேயே இருந்து என்ன நடக்கிறது என்று பார்ப்போம்!
சிறிது நேரத்தில்— ஒரு விமானம் பறந்து வந்தது.
அந்த விமானமும் மாயாவி மலைமுகட்டு அருகே தரை இறங்கியது.
விமானத்தில் இருந்த பெட்டிகள் வேனுக்கு மாற்றப்பட்டன.

விமானத்தில் இருந்து எதையோ வேனுக்கு மாற்றுகிறார்கள்!
என்னவாக இருக்கும்!
இவர்கள் சட்டத்துக்கு புறம்பான செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என நினைக்கிறேன்!
பெட்டிகள் மாற்றப்பட்டதும், விமானம் புறப்பட்டது.
வாம்பசி கிராமத்தை நோக்கித்தான் செல்கிறார்கள்!
வாம்பசி கிராமத்தில் இவர்களுக்கு வேலையில்லை! எதற்கும் அவர்களுக்கு செய்தி அனுப்பு!
உடனே முரசுமூலம் செய்தி போனது.
வாம்பசி! 6 சக்கர வாகனம் அங்கு வருகிறது. நிறுத்தி சோதனை செய்யவும். மாயாவியின் கட்டளை!

ஆபத்து எதுவும் இல்லை!
வாம்பசி! 6 சக்கர வாகனம் அங்கு வருகிறது. நிறுத்தி சோதனை செய்யவும். மாயாவியின் கட்டளை!
வேனை ஒரு சிறிய விமானம் பின்தொடர்ந்தது.
செய்தி கேட்டு வாம்பசியினர் வேனைத் தேடி புறப் பட்டார்கள்.
ஓர் இடத்தில்— வாம்பசியினர் வேனைக் கண்டார்கள்.
!
!
!
FALK
வண்டியை நிறுத்து!

வண்டியை மறிக்கிறார்களே! என்ன செய்வது?
சுட்டுத்தள்ள வேண்டியதுதான்!
டுமீல்....!
டுமீல்....!
வாம்பசியினர் ஜீப்பை நோக்கி ஈட்டியை எறிந்தார்கள்.
மாயாவி! 6 சக்கர வாகனம் நிற்காமல் செல்கிறது! எங்களை எதிர்த்து தாக்கு கிறார்கள்!
வாம்பசியினர் மாயாவிக்கு செய்தி அனுப்பினார்கள்.
மாயாவி! 6 சக்கர வாகனம் நிற்காமல் செல்கிறது! எங்களை எதிர்த்து தாக்குகிறார்கள்!

நான் உடனே புறப்படுகிறேன்
உடனே மாயாவி குதிரையில் ஏறி விரைந்தார்.
என்ன முரசு சத்தம் கேட்கிறது!
காட்டுக்குள் திருவிழா எதுவும் நடக்கலாம்!
என்ன துப்பாக்கி சத்தம்!
விமானம் பின்னே வந்துகொண்டு இருக்கிறது!
அந்த சிறிய விமானம் வேனை பின்தொடர்ந்து வந்தது.
நாம் தொடர்ந்து செல்ல வேண்டியதுதான்!
அப்போது காட்டு யானைகள் அங்கே வந்தன.

யானையை வாம்பசியினர்தான் அழைத்து வந்திருந்தார்கள்.
ஏய்...! யானையை வழிவிடச் சொல்!
நகரவில்லையே? நம்மை நிறுத்தத்தான் யானையை பயன் படுத்துகிறார்கள்!
சுட்டுத்தள்ள வேண்டியதுதான்!
ஏய்... நம்மை சுடுகிறார்கள்!
அதற்குள் மாயாவி அங்கே வந்தார்.
டெவில்! ஹீரோ இங்கேயே நில்லுங்கள்!
உடனே மாயாவி ஒரு மரத்தில் ஏறினார்.

யானைகள் வேனை நகரவிடாமல் வழிமறித்தன.
இனி யானையை சுடவேண்டியதுதான்!
யானைகள் நம்மைச் சுற்றி முற்றுகையிட்டு விட்டனவே?
அதற்குள் மரத்தில் இருந்த மாயாவி வேனுக்குள் குதித்தார்
டமார்
படார்...!
ஆ... மாயாவி வந்துவிட்டார்!
ஆமாம்!
கும்... கும்
மாயாவி வேனில் இருந்தவர்களை தாக்கினார்.

மேலே விமானத்தில் இருந்தவன் பைனாகுலரில் பார்த்தான்.
என்ன வேனை காணவில்லை!
எதுவும் ஆபத்து நேர்ந்து விட்டதா?
காட்டுக்குள் உங்களுக்கு என்னடா வேலை?
மாயாவி டிரைவரை தூக்கி வெளியே வீசினார்.
மாயாவி அடுத்தவனையும் தூக்கி வெளியே வீசினார்.
இருவரும் மயங்கிக் கிடந்தார்கள். தாடையில் மாயாவியின் முத்திரை பதிந்திருந்தது.
முதலில் வண்டியை சோதனையிடுங்கள்!

என்ன கனமாக இருக்கிறது!
அட! பெட்டி நிறைய துப்பாக்கிகள்!
துடால்
வாம்பசியினர் வேனில் இருந்த பெட்டிகளை வெளியே தூக்கிப் போட்டார்கள்.
வெடிகுண்டுகள், எந்திரத் துப்பாக்கிகள் இவைகளை காட்டில் வந்து கடத்துகிறார்களே! இது யாருடைய வேலை?
மயங்கிக் கிடப்பவர்கள் எழுந்தால் உண்மை தெரியும்!
விமானத்தில் இருப்பவர்கள் இந்த ஜீப்பை நோட்டமிட்டு வருகிறார்கள்!
வண்டியை எங்கே?
யாரோ முகமூடி அணிந்தவன் ஜீப்பை நிறுத்திவிட்டான்!

அதற்குள் மயக்கத்தில் இருந்தவர்கள் எழுந்தார்கள்.
இவர்களை விசாரித்தால் உண்மை வெளிவரும்!
நாங்கள் எங்கே இருக்கிறோம்?
தண்ணீர் வேண்டுமா?
பளார்...! பளார்...!
மாயாவி தண்ணீரை அவர்கள் முகத்தில் அடித்தார்.
இந்த ஆயுதங்களை யாருக்கு கடத்திச் செல்கிறீர்கள்?
எங்களுக்குத் தெரியாது!

விமானம் உங்களை பின்தொடர்ந்து வருகிறது! அவர்களும் உங்கள் ஆட்கள்தானே?
இங்கே ஏதோ விபரீதம் நடக்கிறது!
நீங்கள் கூலிப் படையைச் சேர்ந்தவர்கள் என நினைக்கிறேன்! யாருக்காக இதைச் செய்கிறீர்கள்?
இப்படிக் கேட்டால் இவர்கள் வாயைத் திறக்க மாட்டார்கள்!
இது காடு! நகர சட்டம் இங்கு செல்லுபடியாகாது!
வாயை மூடு!
ஏய்...!
இதோ வாம்பசியினர் வந்துவிட்டார்கள்! அவர்கள் உண்மையை வரவழைப்பார்கள்!

உட்காருடா!
இவர்கள் ஆட்கள் பலரை சுட்டுத் தள்ளி விட்டீர்கள்!
??!!
சூரியன் மறையப் போகிறது! அதற்குள் உண்மை வர வேண்டும். இல்லா விட்டால்....!
சொல்லிவிடு கிறோம்!
ஈட்டிகள் அவர்களை நெருங்கின.
இந்த வண்டி எப்படிக் காட்டுக்குள் வந்தது?
ஏய்... மூச்சு விடாதே.
நாங்கள்....!

சொல்லுடா.
ஆ... ஆமாம்!
நாங்கள் தாராசிம்மாவில் இருந்து வருகிறோம்!
பெரிய லாரி மூலமாக தாராசிம்மாவில் இருந்து கடற்கரை வழியாக பெங்காலியாவுக்கு வந்தோம்!
நாங்கள் மாயாவியின் மலைமுகடு அருகே காத்திருக்க வேண்டும். அங்கே விமானம் வரும் என்று சொன்னார்கள்.
நீங்கள் கடத்துகிற ஆயுதங்களைப் பார்த்தால் ஏதோ போருக்கு தயாராவது போலத் தெரிகிறதே! இதற்கு காரணம் யார்?
அது எங்களுக்குத் தெரியாது!

மாயாவி ஆயுதங்களைப் பார்த்ததும் யோசனையில் ஆழ்ந்தார்.
?
பெங்காலியாவின் முதல் ஜனாதிபதியாக லூகா பதவி ஏற்றுக்கொண்டார்.
லூகா...!
லூகா...
லூகா...
லூகா பதவி ஏற்றதும் அனைவரும் மகிழ்ந்தார்கள்.
ஆனால், ஜெனரல் மிராண்டா மட்டும் ஆவேசப்பட்டான்.
லூகாவை பதவியில் இருந்து இறக்க வேண்டும்!
ஆமாம்!

இங்கு நான் வைப்பது தான் சட்டம்!
மிராண்டா கொக்கரித்தான்!
மிராண்டா தன் சகாக்களுடன் சதித்திட்டம் தீட்டினான்.
காட்டில்—
ஆயுதங்கள் கடத்த இன்னும் எத்தனை வண்டிகள் காத்திருக்கின்றன?
பதினைந்து வேன்கள்
உஷ்...!
பதினைந்து! போருக்கு இவ்வளவு ஆயுதம் போதுமே? இது யாருக்குச் செல்கிறது!
கலோனல்!
கலோனல் ஆன்வர்டு!

இந்த ஆயுதங்களை வைத்து தாராசிம்மாவில் இருந்து பெங்காலியா மீது போர் தொடுக்கப் போகிறார்கள்! அதை முதலில் நிறுத்த வேண்டும்!
அது எப்படி முடியும்? அவர்கள் ஆயுதங்கள் பயங்கரமானவை!
நமக்கு அதிக நேரம் தேவைப்படும்! அதனால் வண்டிகளை பங்சர் ஆக்க வேண்டியதுதான்!
உஷ்...
உஷ்...
உஷ்...!
நான் உடனே மாவிட்டானுக்கு புறப்படுகிறேன்!
அதுதான் நல்லது!
போய் கலோனல் ஆன்வர்டுக்கு சரியான பாடம் கற்பிக்கிறேன்!

நம்மை இந்த காட்டுவாசிகள் என்ன செய்யப் போகிறார் களோ?
நீங்கள் இரண்டு வாம்பசியினரை சுட்டுக்கொன்றிருக்கிறீர்கள்! அதனால் இவர்களுடன் செல்லுங்கள்!
இவர்களுடனா?
வேண்டாம்! எங்களை நகரத்தில் விட்டுவிடு!
நகரச் சட்டத்துக்கு கட்டுப்படுகிறோம்!
இல்லை! நீங்கள் கொலை செய்தது காட்டுக் குள். அதனால் இவர்கள் தான் தண்டனை வழங்குவார்கள்!
இம்ழ என்ன நடக்கிறது!
பரபரப்பான சூழ்நிலை நிலவுகிறது!
எங்களை என்ன செய்வார்கள்?
அது காட்டு நீதிபதிக்குத்தான் தெரியும்!

முதலில் வண்டியில் இருந்து இந்த பெட்டிகளை அகற்ற வேண்டும்!
!!
இவைகளை பத்திரமாக புதைத்துவை!
இப்பொழுதே புதைத்து விடுகிறோம்!
மாயாவி! உங்கள் அடுத்த திட்டம் என்ன?
சொல்கிறேன். கவனமாக கேள்!

நீங்கள் மூன்று பேர் தாராசிம்மாவுக்குச் சென்று அங்கிருக்கும் வண்டிகளில் நான் இங்கு செய்ததைப் போல செய்து விடுங்கள்!
ஓ.கே. மாயாவி!
உடனே மாயாவி வேனின் பங்சர் ஆன டயரை மாற்றினார்.
இதை கழற்றிவிட்டு புது டயரை மாட்டுகிறேன்!
!!!
பிறகு— மாயாவி வேனில் ஏறினார்.
யானையை வழிவிடச்-செய்! நான் போகவேண்டும்!


மாயாவி வேனை கிளப்பினார்.
நான் நேராக மாவிட்டானுக்குச் சென்று கலோனல் ஆன்வர்டை சந்தித்து விட்டு வருகிறேன்!
ஏய்...வேன் புறப்பட்டுவிட்டது!
உடனே கலோனலுக்கு தெரிவிக்க வேண்டும்!
விமானத்தில் நோட்டமிட்டார்கள்.

ஏய்! கலோனலுக்கு தொடர்பு கிடைத்து விட்டது!
விமானம் நம்மை பின்தொடர்ந்து வருகிறதே!
சார்! முதல் வண்டி புறப் பட்டுவிட்டது!
ஓ.கே.! நான் தாராசிம்மாவுடன் தொடர்பு கொள்கி றேன்!
ஓ.கே. கலோனல் ஆன்வர்டு!
முட்டாள்! என் பெயரைச் சொல்லாதே! முதல் வண்டி புறப்பட்டுவிட்டது! நாளை அடுத்த ஐந்து வண்டியை அனுப்பிவை!
காட்டில்—
இந்த வண்டி மாவிட்டானுக்கு வெளியே உள்ள முகாமுக்கு போய்ச் சேர வேண்டும் என்று சொன்னார்கள்!
கலோனல் ஆன்வர்டு! என்ன நோக்கத்துக்காக இந்த ஆயுதங்களை கடத்துகிறான்?

தாராசிம்மாவில்—
மேலிடத்தில் இருந்து உத்தரவு வந்திருக்கிறது! நாளை ஐந்து வண்டிகளும் புறப்பட வேண்டும்!
நாளை விமானத்தில் இருந்து இந்த ஐந்து வேன்களுக்கு ஆயுதங்கள் மாற்றப்பட வேண்டும்!
ஆனால், காட்டுவாசிகள் தாராசிம்மாவை நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.
இரவில்— தாராசிம்மா காட்டில் ஐந்து வேன்கள் தயாராக இருந்தன. ஆட்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.
zzz...
zzz...

காட்டுவாசிகள் அவர்கள் மண்டையில் தாக்கினார்கள்.
படார்...!
பிறகு ஐந்து வண்டிகளின் டயர்களையும் ஈட்டியை வைத்து குத்தி பங்சர் ஆக்கினார்கள்.
ஸ்...
ஸ்...
விடிந்ததும் வண்டியின் டயர்களைப் பார்த்தவர்கள் அதிர்ந்து போனார்கள்.
எல்லா டயருமே பங்சரா?
மொத்தம் 30 டயர்!
யாருடைய வேலை இது!
காட்டு மிருகம் எதுவும் விளையாடி விட்டதா?
மறைந்திருந்த காட்டுவாசிகள் மகிழ்ந்தார்கள்.

இரவில்— மாவிட்டானுக்கு வெளியே உள்ள வயல்பரப்பில், இரகசிய, விமானம் தரை இறங்கியது.
நம்முடைய உளவு விமானம் வந்துவிட்டது!
கலோனல் அங்கு இருந்தான்.
கலோனல் ஆன்வர்டு! நம் முதல் வண்டி இன்னும் ஒரு மணி நேரத்தில் வந்துவிடும்!
முட்டாள்! என்பேரை உபயோகப்படுத்தாதே!
ஆலிவ்! என்று சொல்! அப்பொழுதுதான் சந்தேகம் வராது!
சரி! ஒரு வண்டி இப்பொழுது வந்து விடும்!
அடுத்த ஐந்து வண்டி!
அடுத்த ஐந்து வண்டிகள் கடற் கரையோரம் நிற்கின்றன

உடனே ஆன்வார்டு கடற்கரைக்கு போன். செய்தான்.
அடுத்த ஐந்து வண்டி எப்பொழுது புறப்படுகிறது!
புறப்பட வாய்ப்பு இல்லை கலோனல்!
எல்லா வண்டிகளும் பங்சர்!
என்ன
நேற்று இரவு காட்டு மிருகங்கள் டயர்களை பங்சர் ஆக்கி விட்டன!
முட்டாள்! காட்டு மிருகங்கள் எப்படி பங்சர் ஆக்க முடியும்!
இது யாருடைய வேலை?
ஓர் இடத்தில் டயர்கள் குவிக்கப்பட்டு இருந்தன
இந்த டயர்களை ஏற்றிக்கொண்டு உடனே கடற்கரைக்கு புறப்பட வேண்டும்!
இது குட்டி விமானம்! இதில் ஏற்ற முடியாது!
முட்டாள்! முதல் வண்டி வந்ததும் பெட்டிகளை இறக்கிவிட்டு அதில் டயர்களை எடுத்துச் செல்!

அதேநேரம்— முதல் வண்டியை மாயாவி ஓட்டிவந்தார்.
தோமா! ஹீரோவை பார்த்துக்கொள்! நான் நகருக்குப் போய் வருகிறேன்!
முதல் வண்டி வந்துவிட்டது!
அதில் உள்ள பெட்டிகளை இறக்கிவிட்டு டயர்களை ஏற்றிச் செல்லலாம்!
முதல் வண்டி வந்து சிறிது தூரத்தில் நின்றுவிட்டது.
வண்டி ஏன் அங்கே நின்றுவிட்டது! போய் இங்கே வரச் சொல்!
ஒருவன் வண்டி அருகே சென்றான்.
டிரைவர்! கலோனல் வண்டியை...!
கும்...!
அவன் முடிப்பதற்குள் மாயாவி ஒரு குத்துவிட்டார்.

பைலட் போயும் ஏன் வண்டி நகரவில்லை!
தெரியவில்லை கலோனல்!
உடனே இருவரும் வேனுக்கு ஓடிவந்தார்கள்.
பைலட் மயங்கிக் கிடந்தான்.
பைலட்டுக்கு என்னாச்சு?
வண்டியில் இருந்த இரண்டு டிரைவர்களை எங்கே?
டிரைவர்ரைக் காணவில்லை! பின்னால் பெட்டிகள் இருக்கிறதா என்று பார்!
கலோனல்! வண்டியில் எதுவும் இல்லை!

என்ன உளர்கிறாய்?
வண்டியில் வந்த ஆயுதங்களை எங்கே? டிரைவரையும் காணவில்லை!
பைலட் வேறு தாக்கப்பட்டிருக் கிறான்!
கலோனல்! அவன் தாடையை பாருங்கள்!
மண்டை ஓட்டுக்குறி!
அபாயச் சின்னமாச்சே!
இந்த அபாயச்சின்னம் எப்படி வந்தது?
இவனுக்கு இதற்குமுன் இருந்ததில்லையே?

ஏதோ சதி நடந்திருக்கிறது!
கலோனல்! இரண்டு டிரைவர்களும் பைலட்டை தாக்கிவிட்டு, ஆயுதத்தை கடத்தியிருப்பார்களோ?
பைலட் எழுந்தால்தான் உண்மை புரியும்!
மாயாவி மறைந்து இருந்தார்.
இவன் இறந்து விட்டானா?
இல்லை மயக்கம்தான்!
முதலில் நாம் டயர்களை ஏற்றிக்கொண்டு கடற்கரைக்குச் சென்று அந்த ஐந்து வண்டிகளையும் புறப்படச் செய்வோம்!
கலோனல்! அந்த அபாயச் சின்னத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
முட்டாள்! யோசிக்க இதுவா நேரம்! முதலில் அந்த ஐந்து வண்டிகளையும் புறப்படச் செய்ய வேண்டும்!

அதே அபாயச் சின்னம் எல்லா டயர்களிலும் இருக்கிறது!
எவனோ என் திட்டத்தை தெரிந்துகொண்டு செயல்படுகிறான்!
பைலட் தாடையிலும், டயர்களிலும் அபாயச் சின்னம்!
யாராக இருக்கும்?
பலே கில்லாடியான ஆளாக இருக்கும்!
பலே கில்லாடியான ஆளா?

அப்பொழுது கலோனலின் ஆள் ஒருவன் வந்தான்.
கலோனல்! நான் வாம்பசி கிராமத்துக்காரன்! எனக்கு இந்த முத்திரையைப் பற்றி தெரியும்! இது மாயாவியின் முத்திரை!
இனி நம் திட்டம் தவிடுபொடியாகி விடும்!
டேய்...! இவன் கைகளை கட்டி காட்டுக்குள் அழைத்துச் சென்று சுட்டுத்தள்ளு!
!!
கலோனல்! இவனை உண்மையிலேயே கொல்லச் சொல்கிறீர்களா?
ஆமாம்! இது என் கட்டளை!

மாயாவியாம்! என் திட்டத்தை தவிடு பொடியாக்கி விடுவானாம்!
காட்டுக்குள் உலவும் கட்டுக்கதையை என்னிடமும் உளறுகிறான்! அவனை சுட்டுத்தள்ளு!
காட்டுக்குள் அழைத்துச் சென்று யூனிபார்ம் உடையை கழற்றி விட்டுச் சுடு!
கலோனல்! நான் என்ன தவறு செய்தேன்!
முட்டாள்! மாயாவி என்று என்னையே முட்டாளாக்கப் பார்க்கிறாயா?
அவனை அழைத்துச் சென்றான்.
ஏய்... என் சகோதரன் எங்கே? என் குடும்பம் என்னாச்சு? என்னை விட்டுவிடு!
ஜாக்கோ! உன்னை கொல்லச் சொல்லி எனக்கு கட்டளை!
மாயாவி அதையும் கவனித்தார்!

முட்டாள்தனமான முடிவு இது!
அவர் என் தலைவர்! அவரது கட்டளையை நிறைவேற்ற வேண்டியது என் கடமை!
இத்தோடு உன் கதை முடிந்தது!
துப்பாக்கி ஜாக்கோவின் நெற்றிப் பொட்டில் வைக்கப்பட்டது.
அப்போது மாயாவியின் இரும்புக் கை ஓங்கி குத்துவிட்டது.
கும்..
மிக்க நன்றி! யார் நீங்கள்?
என்னைப் பற்றித்தானே இவ்வளவு நேரம் பேசிக்கொண் டிருந்தாய்!
மாயாவி!
ஜாக்கோ அதிர்ச்சி அடைந்தான்.

உங்களைப் பற்றி எனக்கு நன்றாகவே தெரியும்!
சரி கேப்டன்! கலோனல் ஆன்வர்டின் திட்டம் பற்றி கூறு...!


என்னைப் போன்ற இளம் அதிகாரிகளை கலோனல் மடக்கி வைத்திருக்கிறான்!
லூகாவுக்கு ஆபத்து உண்டா?
நாட்டை கூறு போடுவதற்கா?
அவரை கொல்லப் போகிறார்கள்!

உனக்கு லூகாவை கொல்ல ஆசையா?
இல்லை! அவர் மிகவும் நல்லவர்' ஆனால்...

நான் கலோனலுடன் சேரவில்லை என்றால் என்னைக் கொன்று விடுவார்கள்!
இனி நான் திரும்பிச் செல்ல முடியாது!
நீ செத்ததாகவே இருக்கட்டும்! ஆனால், எனக்கு உதவலாமே?
நீ எனக்கு உதவினால் உனக்கு நான் மறைவிடம் தேடித் தருகிறேன்!
உண்மையாகவா?
ஆமாம்... இப்போது எங்கே போகிறீர்கள்?
திடீரென்று மாயாவி சத்தம் கேட்டு அந்த இடத்தைவிட்டு நகன்றார்.
அங்கே— கலோனல் கட்டளையிட்டுக் கொண்டிருந்தான்.
இன்று கேப்டன் ஜாக்கோ எனக்கு எதிராக பேசினான், அதனால் அவன் கதையை முடித்துவிட்டேன்!

இந்த வாரம் என் திட்டம் நிறைவேற வேண்டும். அதன்பிறகு நாட்டில் தேர்தல், சுதந்திரம் என்ற பேச்சுக்கே இடமில்லை!
நாம் எடுத்த சபதம் முடித்து வெற்றி அடைய வேண்டும்!
ஆமாம்! வெற்றி நம் பக்கம்தான்!
மாயாவி மறைந்திருந்து ஆன்வர்டின் பேச்சைக் கேட்டார்.
ஹூகாவை தீர்த்துக் கட்டத்தான் இந்தக் கூலிப்படை ஆயுதங்களை கடத்துகிறது!
இனி நீங்கள் அவரவர் இடத்துக்கு போகலாம்!
அடுத்து என் சிக்னல் வரும்வரை காத்திருங்கள்!
கலோனல்! உண்மையிலேயே என் சகோதரன் ஜாக்கோவை கொன்றுவிட்டீர்களா?
?
என்னிடம் கேள்வி கேட்பது எனக்குப் பிடிக்காது!
இவன் ஜாக்கோவின் சகோதரனா?

உடனே மாயாவி ஜாக்கோவின் சகோதரன் ஜீப்பில் ஏறினார்.
ஏய்... யார் நீ?
நீ கேப்டன் ஜாக்கோவின் சகோதரன் தானே?
ஆமாம்.... நீ யார்?
காரை நிறுத்து! அவர்கள் போகட்டும்!
என் சகேதரன் ஒரு பாவம் அறியாதவன். அவனை அநியாயமாக கொன்றுவிட்டான்!
உன் சகோதரன் சாகவில்லை!

அப்படியா? கலோனல் அப்படிச் சொன்னானே?
அவன் என் பாதுகாப்பில் நலமாக இருக்கிறான்!
யார் நீ?
காரை மெதுவாக செலுத்து! நடந்த கதையை சொல்லுகிறேன்!
உன்னைப் பற்றி எதுவும் சொல்ல வில்லையே?
உன் சகோதரனும் அதையேதான் கேட்டான். தெரு விளக்கில் வண்டியை நிறுத்திப் பார் தெரியும்!
தெரு விளக்கில் வண்டி நிறுத்தப்பட்டது.
ஆ... மாயாவி!

ஆ... மாயாவி!
உஷ்... சத்தம் போடாதே! நீயும் உன் சகோதரனும் எதுவும் மூச்சுவிடக் கூடாது!
மாயாவி துப்பாக்கியை எடுத்து மிரட்டினார்!
எனக்கு உன் உடையையும், தொப்பியையும் கழற்றிக்கொடு!
??
மாயாவி அவனது உடுப்பை அணிந்துகொண்டு ஜீப்பில் புறப்பட்டார்.
மாயாவி நேராக லூகாவின் மாளிகைக்கு வந்தார்.
நான் அவசரமாக லூகாவை பார்க்க வேண்டும்!
அவர் தூங்கப் போய்விட்டார். அவரைப் பார்க்க முடியாது!
அப்படியா? பரவாயில்லை நான் பார்க்கிறேன்!

மாயாவி கேட்டை உடைத்துக்கொண்டு மாளிகைக்குள் நுழைந்தார்.
மால்...
!!
டுமீல்...!
டுமீல்...!
காவலாளிகள் மாயாவியை சுட்டார்கள்.
ஓர் இடத்தில் ஜீப் மட்டும் அநாதையாக நின்றது.
அவனைக் காணவில்லையே?
உடனே எச்சரிக்கை மணியை அலறவிடு!
?
உடனே லூகா சுறுசுறுப்பானார்.
மாயாவி புதர்மறைவில் மறைந்திருந்தார். காவலாளிகள் அலாரம் கேட்டவுடன் திபுதிபுவென்று ஓடினார்கள்.

ரிங்...ரிங்...!
என்ன அலாரம் அடிக்கிறது!
சார்! இராணுவ வண்டி நம் கேட்டை உடைத்தெறிந்து விட்டு உள்ளே வந்துவிட்டது!
கேட்டை உடைத்துக் கொண்டா? யார் அவன்?
சார்! அவனுடன் ஒரு பெரிய நாய் இருந்தது!
என்னமாதிரி நாய்?
ஓநாய் போல இருந்தது சார்!
அப்படியா? காவலாளிகளை தேடுவதை நிறுத்தச் சொல்!
சார்! ஆள் பயங்கரமாக இருந்தான்!
சார்! எனக்கென்னமோ அவன் பயங்கர சதித்திட்டத்துடன் வந்திருக்கிறான்! என நினைக்கிறேன்
நான் சொல்வதைச் செய்... போ!

எப்படிக் கண்டுபிடித்தீர்கள் லூகா ?
பெரிய நாயுடன் உன்னைத் தவிர யார் வருவார்கள். அதுவும் என் கேட்டை உடைத் தெறிந்துவிட்டு'
நடுஇராத்திரியில் வந்திருக்கிறாயே? எதுவும் அவசரச் செய்தியா?'
பரட்சி வர இருக்கிறது!
புரட்சி செய்யப் போவது யார்?
உங்கள் நல்லாட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப் போகிறார் கள்! உங்களுக்கும் சேர்த்துத்தான்!
உங்கள் இராணுவத்தில் இருக்கும் அதிகாரிகள்தான்!
குறிப்பா யார் என்று சொல்ல முடியுமா!

உடனே லூகா போனை எடுத்தார்.
யாரும் என்னை தொந்தரவு செய்ய வேண்டாம்!
அது எப்படி காட்டுக்குள் இருக்கும் உனக்குத் தெரிந்தது!
காட்டுக்குள்தானே வண்டி வண்டியாக ஆயுதங்களை கடத்துகிறார்கள்!
உங்களுக்கு எதிராக ஒரு சிறிய இராணுவமே உருவாகிறது!
யாருடைய வேலை இது?
ஜீப்பை காட்டுக்குள் கொண்டுவந்து அதன்மூலம் ஆயுதங்கள் கடத்து கிறார்கள்!
காட்டுக்குள்ளா! அது எப்படி?

காட்டுக்குள் ஜீப் வந்ததைப் பார்த்து என்னிடம் சொன்னார்கள்.
?!
அவர்கள் விமானத்தில் இருந்து ஆயுதங்களைப் பெற்றுக்கொண்டு புறப் பட்டார்கள்!
வாம்பசியினர் யானையை வைத்து அந்த வண்டியை நிறுத்தினார்கள்!
ஐந்து முதல் பதினைந்து வண்டிகள் தாராசிம்மாவில் தயாராக இருக்கின்றன!
அந்த வண்டிகள் புறப்படாமல் தடுப்பதற்காக வண்டிகளின் டயர்களை பங்சர் ஆக்கிவிட்டேன்!
அருமையான யோசனை!
ஸ்...

இராணுவ அதிகாரிகள் உங்கள் ஆட்சியை கலைக்கப் போகி றார்கள்!
ஏன்...? எதற்காக...?
பதவி வெறி! நாட்டை ஆளவேண்டும் என்று ஆசை!
இவர்களுக்கு தலைவன் யார்?
அதுவும் ஓர் உயர் அதிகாரிதான். அவர் பெயர்...!
அவர் இருக் கிறாரா? உடனே என்னை வந்து பார்க்கச் சொல்!
உடனே லூகா போனை எடுத்து கட்டளையிட்டார்.
இப்பொழுது வருகிறவன் ஒரு நேர்மையான அதிகாரி. திறமையானவன். என் உறவினரும்கூட...!

இராணுவத்துக்கு மிகவும் தகுதியானவன். நான் இல்லாதபோதுகூட படை நடத்தி செல்லக் கூடியவன்!
அவன் பெயர் ஆன்வர்டு! என் தங்கையின் மகன்!
!!
ஆன்வர்டு உங்கள் தலைமை அதிகாரியா! அதுவும் உங்கள் தங்கையின் மகன்!
ஆமாம்! மாயாவி!
இது யாருக்கும் தெரியாது! நான் அவனை என் சிபாரிசின் பேரில் சேர்த்துக்கொள்ளவில்லை! அவன் தகுதியை வைத்து சேர்த்தேன்!
அவனைப் போல நேர்மையான அதிகாரியை யாரும் பார்க்க முடியாது!
அவன் நேர்மை யானவனா?

அவன் ஐரோப்பாவில் பயிற்சி எடுத்திருக்கிறான்! அதனால்தான் சில புதுமையான யோசனைகளை நடைமுறைப்படுத்தி யிருக்கிறான்!
ஆட்சியை கவிழ்ப்பதுவும் புதுமைதானே!
தட்...! தட்...!
அதோ வந்துவிட்டான்!
டெவிலும், நானும் இங்கு திரைமறைவில் மறைந்திருக்கிறோம்!
நீங்கள் அவனிடம் பேசுங்கள்!
கலோனல் ஆன்வர்டின் வணக்கம்! என்னை அழைத்தீர்களாமே?
ஒரு முக்கியமான விசயம் பேசுவதற்கு உன்னை அழைத்தேன்!
சொல்லுங்கள் சார்!

இராணுவத்தில் அதிகாரிகளுக்குள் எதுவும் பிரச்சினையா?
என்ன சொல்கிறீர்கள்!
அரசாங்கத்துக்கு எதிராக ஒரு கூலிப்படை உருவாக்கப்பட்டிருக்கிறதாம்? காட்டுக்குள் வேறு ஆயுதக் கடத்தல் நடக்கிறதாம் எனக்கு நம்பத் தகுந்த இடத்தில் இருந்து தகவல் வந்திருக்கிறது!
என்ன முட்டாள்தனம்! இதை உங்களுக்குச் சொன்னது யார் சார்?
எனக்கு எதிராக கூலிப்படை உருவாகியிருக்கிறதா இல்லையா?
இது பொய்யான தகவல்! சொன்னது யார் சார்?

கலோனல் ஆன்வர்டு! மாயாவி என்று கேள்விப்பட்டிருக் கிறாயா?
மாயாவியா? யார் அது?
லூகா! நீங்கள் நான் சொன்னதைக் கேட்க வில்லையா?
காட்டில் ஆயுதக் கடத்தல்! லூகாவை கவிழ்க்க சதி நடக்கிறதே. அதற்கு காரணம் நீதானே...?
அந்த கூலிப்படைக்கு தலைவன் நீதான் ஆன்வர்டு!
!
ஆன்வர்டு! இது உன் வேலையா? நம்பமுடிய வில்லையே?
இல்லை! இது சுத்தப் பொய்!

பொய் இல்லை! உங்கள் இராணுவ கேப்டன் ஜாக்கோவே இதற்கு ஆதாரம்!
ஜாக்கோவை நினைவிருக்கிறதா? நீ அவனை கொல்லச் சொன்னாயே... அவன் சாகவில்லை!
சார்! முன்பின் தெரியாத முகமூடி சொல்வதை நம்புகிறீர்களா? என்னை நம்பமாட்டீர்களா?
இவரைப் பற்றி உனக்குத் தெரியாது!
இனி! என் வேலையை காட்ட வேண்டியதுதான்!
ஆன்வார்டு!
ஆன்வார்டு டக்கென்று துப்பாக்கியை எடுத்தான்.

மாமா! என்னை மன்னியுங்கள்!
நான் இங்கு வேலைக்கு சேர்ந்ததே ஆட்சியை பிடிக்கத்தான்!
இடையில் இந்த முகமூடி புகுந்து காரியத்தை கெடுத்துவிட்டான்!
அதற்குள் மாயாவியின் துப்பாக்கி ஆன்வர்டின் துப்பாக்கியை எகிற வைத்தது.
டுமீல்...!
ஏய்...!
அசைந்தால் சுட்டுத்தள்ளி விடுவேன்!
நாட்டையே கூறுபோட்டு விற்கப் பார்க்கிறாயா?
கும்...!
மாயாவி அவனைத் தாக்கினார்.

ஆன்வர்டு ஓட முயன்றான்.
டெவில்! அவனை விடாதே!
உடனே டெவில் அவன் மீது பாய்ந்தது.
வீவீவீ...! வீவீவீ...!
என் தங்கையின் மகனே என்னைக் கொல்லப் பார்க்கிறான்!
எனக்குப் பிறகு இந்த நாட்டை நீதான் ஆட்சி செய்ய வேண்டும் என நினைத்துக் கொண்டிருந்தேன்!

இன்னும் எத்தனை நாள் காத்திருப்பது! உங்களுக்கும் எனக்கும் கொஞ்சம்தான் வயது வித்தியாசம்!
அதுவரை நான் காத்திருக்க வேண்டுமா?
உங்களுக்கு எதிராக சதிசெய்யக் கூடியவர்களின் பட்டியல் இவனிடம் இருக்கிறது!
இல்லை! இது சுத்தப் பொய்!
இதோ இந்த டைரியைத்தான் சொன்னேன்! இதில் கூலிப்படையினரின் பட்டியல் இருக்கிறது!
ஒ!
ஏய்... யார்... நீ?

முதலில் உன் தாடையைப் பார் புரியும்!
ஆன்வர்டு கண்ணாடியில் முகத்தைப் பார்த்தான். தாடையில் அபாயச் சின்னம் இருந்தது.
ஆ...!
இதே முத்திரை என் பைலட்டின் தாடையிலும் இருந்ததே!
யார் நீ... யார் நீ...!
மக்கள் என்னை பல பேரில் அழைப்பார்கள்!
அதில் ஒன்று மாயாவி!

ராணி சின்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.
ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

தவளை ராணி மங்கை

6

முன்கதை சுருக்கம்:

மாணிக்கபுரி என்ற நாட்டை மன்னர் மகுடபதி ஆண்டு வந்தார். அவருக்கு தங்கம், குமணன், முத்து என்று மூன்று மகன்கள் இருந்தார்கள். மன்னர் மகுடபதி ஆட்சிப் பொறுப்பை தன் பிள்ளைகளிடம் ஒப்படைக்க முடிவு செய்தார். முதலில் மூவருக்கும் திருமணம் செய்து வைத்து யார் திறமைசாலி என்று கண்டறிய மூவரையும் அழைத்து, நீங்கள் அம்பு எய்ய வேண்டும். அந்த அம்புகளை எந்தப் பெண்கள் எடுத்து வருகிறார்களோ அந்தப் பெண்களை நீங்கள் மணந்துகொள்ள வேண்டும் என்று அரசர் கூறினார். மூவரும் அம்பு எய்தார்கள். தங்கம், குமணன் இருவரும் அழகான பெண்ணை மணந்துகொண்டார்கள். ஆனால், முத்துவோ தவளைப் பெண்ணை மணக்க வேண்டியதாகிவிட்டது. தவளைப் பெண் தைத்த சட்டையும், ரொட்டியும்தான் மன்னருக்கு பிடித்தது.

“**யா**ரும் யாரையும் ஏமாற்றவில்லை. காலம் வரும்பொழுது உண்மை தெரியும். அதுவரை காத்து இருங்கள்” என்று தவளை ராணி எவ்வளவோ வற்புறுத்தி சொன்னாள்.

ஆனால், அதை யாரும் காதில் போட்டுக்கொள்ளவில்லை. “முத்து ஏமாற்றப் பார்க்கிறான்! யாரோ ஒரு பெண்ணை அழைத்து வந்துவிட்டான்” என்று பேசிக்கொண்டார்கள்.

இதைக் கேட்கக் கேட்க முத்துவுக்கு அவமானமாக இருந்தது. உண்மையைத் தெரிந்துகொள்ள விரும்பினான். ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் கூட்டத்தில் இருந்து நழுவினான். தேரில் ஏறி அரண்மனைக்கு வந்தான்.

'மடமட' என்று தவளைப் பெண்ணின் அறைக்குப் போனான். அது பூட்டியிருந்தது. பூட்டை உடைத்தான். உள்ளே சென்று, ஒவ்வோர் இடமாக சோதனை போட்டான்!

ஒரு பெட்டிக்குள் தவளைத் தோல் இருப்பதைப் பார்த்தான்!

"இந்தத் தோலை அணிந்துகொண்டுதான் அவள் தவளையாக மாறுகிறாள். இதை எரித்துவிட்டால் அவள் இளவரசியாகவே இருப்பாள்" என்று நினைத்தான்.

துணியைக் கிழிப்பது போல, அந்தத் தோலை கிழித்தான். தீ வைத்துக் கொளுத்தினான். தோல் நன்றாகப் பற்றி எரிந்தது.

அவசரக்காரனுக்கு புத்தி மட்டம் என்பார்கள். அப்படித்தான் முத்துவும் நடந்துகொண்டுவிட்டான். தவளைப் பெண்ணிடம் ஒன்றும் கேட்காமல், அவள் ஏன் தவளையாக மறைந்து இருக்கிறாள் என்று விசாரிக்காமல், அவசரப்பட்டு தவளைத் தோலை எரித்து விட்டான். இதனால் பின்னால் எவ்வளவு கஷ்டப்படப் போகிறான் என்பதை அப்பொழுது அவன் அறியவில்லை.

இங்கே முத்து தவளைத் தோலை எரித்துக்கொண்டு இருந்த பொழுது, அரண்மனை தோட்டத்தில் தவளைப் பெண் இருந்தாள். அவன் தன்னைவிட்டுப் பிரிந்து போய்விட்டதை அறிந்தாள். அவன் தவளைத் தோலை பார்க்கத்தான் சென்று இருப்பான் என்று உணர்ந்தாள். உடனே அரண்மனைக்கு ஓடிவந்தாள்.

அவள் வந்தபொழுது, தவளைத் தோல் முற்றிலும் பற்றி எரிந்துகொண்டு இருந்தது.

அதைப் பார்த்ததும், தவளைப் பெண் திடுக்கிட்டாள். "ஓ..." என்று அலறி அழுதாள். 'பொல பொல' என்று கண்ணீர் ஆறாகப் பெருகி ஓடியது. அவளே தீயில் சிக்கிக்கொண்டது போல துடித்தாள்.

அவள் அழுவதைப் பார்த்ததும், அவளிடம் முத்து ஓடி வந்தான். "அழகிய பெண்ணே! என் அருமை மனைவியே! ஏன் அழுகிறாய்?" என்று கேட்டான்.

ஆனால், தவளைப் பெண் ஒரு பதிலும் சொல்லவில்லை. முத்துவின் மார்பில் சாய்ந்துகொண்டு விக்கி விக்கி அழுதாள்.

அப்பொழுதுதான் நாம் ஏதோ தவறு செய்துவிட்டோம் என்று முத்து நினைத்தான். 'அவசரப்பட்டு நடந்துகொண்டோம்' என்று வருந்தினான்.

"நான் ஏதாவது தவறு செய்துவிட்டேனா? ஏன் அழுகிறாய்?"

என்று மீண்டும் கேட்டான்.

“அவசரப்பட்டுவிட்டீர்கள்” என்று அழுதுகொண்டே தவளைப் பெண் சொன்னாள்.

“ஆமாம். அவசரப்பட்டுத்தான் விட்டேன். என்னை மன்னித்துக் கொள்” என்று முத்து சொன்னான். தவளைப் பெண்ணுக்கு பலவாறாக ஆறுதல் கூறினான்.

சிறிது நேரம் கழித்து, “நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய்? ஏன் இந்தத் தவளைத் தோலை போர்த்திக்கொண்டு இருக்கிறாய்?” என்று முத்துகேட்டான்.

“இன்னும் மூன்று நாளைக்கு இந்தத் தவளைத் தோலை நான் போர்த்திக்கொண்டு இருந்தால். நிரந்தரமாகப் பெண்ணாகிவிடு வேன். பிறகு இது தேவையே இருக்காது. ஆனால், அதற்குள் அவசரப்பட்டுவிட்டீர்கள்” என்று தவளைப் பெண் சொன்னாள்.

“நீ சொல்வதைக் கேட்க, எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. நீ யார்? ஏன் இந்தத் தவளைத் தோலை போர்த்திக்கொண்டாய்? உன் வரலாறை எனக்கு சொல்வாயா?” என்று முத்து கேட்டான்.

“உங்களிடம் சொல்லாமல், வேறு யாரிடம் சொல்லப் போகிறேன்” என்றாள். தவளைப் பெண் அவளது கதையைக் கூறினாள்!

பவளத்தீவு என்ற நாட்டின் இளவரசி நான். என் பெற்றோர் களுக்கு நான் ஒரே மகள். பிறக்கும்பொழுதே நான் மிகவும் அழகாக இருந்தேன். வளர வளர என் அழகும் பட்டை தீட்டப்பட்ட வைரம் போல வளர்ந்து வந்தது.

முஸ்தபா என்று ஒரு மந்திரவாதி இருக்கிறான். அவன் பவளத் தீவுக்கு வந்தான். நகர வீதியில் மந்திர தந்திர வித்தைகளை செய்து காட்டினான். அதைப் பார்க்க நானும் தோழிகளுடன் போனேன்.

என்னை மந்திரவாதி பார்த்தான். என் அழகில் மயங்கிவிட்டான். எப்படியும் என்னை வசப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நினைத்தான். அன்று இரவு யாருக்கும் தெரியாமல் என் அந்தப்புரத்திற்குள் நுழைந்து, என்னை மயங்கச் செய்து, தூக்கிக் கொண்டு வந்துவிட்டான்.

மறுநாள் காலையில் பொழுது விடிந்ததும், நான் கண்விழித்தேன். மந்திரவாதியின் குகையில் இருப்பதை உணர்ந்தேன். அழுது புலம்பினேன்; அலறித் துடித்தேன். அதைப் பார்த்தும், மந்திரவாதியின் மனம் இரங்கவில்லை.

விருப்பம் இல்லாத பெண்ணைத் தொட்டால், அவன் கற்ற மந்திரம் எல்லாம் பலிக்காமல் போகும் என்று, அவனுக்கு மந்திரம் கற்றுக் கொடுத்த குரு கூறியிருக்கிறாராம். ஆகவே, அவன் என்னை எவ்வளவோ அன்பாக நடத்தினான். அவனை மணந்துகொள்ளும்படி கெஞ்சினான். ஆனால், நான் மறுத்துவிட்டேன்.

இதனால் கோபம் அடைந்த அவன், என்னை தவளையாக்கி விட்டான். "அய்யோ... மீண்டும் நான் பெண்ணாக மாறவே முடியாதா?" என்று நான் கேட்டேன்.

"இந்தத் தவளை உருவிலேயே எவனாவது ஒரு வீரன் உன்னை திருமணம் செய்துகொள்ள வேண்டும். அவனுடன் இந்தத் தவளை உருவிலேயே, ஆறு மாதம் நீ சேர்ந்து வாழ்ந்தால், மீண்டும் உன் சொந்த உருவத்தை பெறுவாய்" என்று கூறினான்.

"அதற்கு முன்பு இந்தத் தவளை உருவில் இருந்து நீயே விடுதலை பெற முயற்சி செய்தால்– அல்லது, உன்னை விடுவிக்க வேறு யாராவது முயற்சி செய்தாலும், நீ குயில் ஆக மாறி, மீண்டும் என்னிடமே வந்து சேர்ந்துவிடுவாய்" என்றும் மந்திரவாதி எச்சரித்தான்.

இவ்வாறு தவளைப் பெண் தனது கதையைக் கூறி முடித்தாள்.

அப்பொழுது அவளைச் சுற்றி 'குபுகுபு' என்று புகை தோன்றியது! கார்மேகக் கூட்டம் போல அது இருந்தது. ஒரே புகைமண்டலம்!

புகையைப் பார்த்ததும் "இளவரசி! இளவரசி" என்று முத்து அலறினான். தவளை ராணியைப் பிடிக்க, புகைக்குள் புகுந்தான்! புகைமண்டலத்திற்குள் ஒன்றுமே இல்லை!

காற்றிலே மிதந்து செல்லும் மேகம் போல, புகை பறந்து சென்றது. சிறிது நேரத்தில் புகை முழுவதும் மறைந்துவிட்டது. தவளைப் பெண் நின்ற இடத்தில் ஒரு குயில் நின்றது.

"ஆ...! அதற்குள் குயிலாக மாறிவிட்டாயா?" என்று முத்து அலறித் துடித்தான். குயிலைப் பிடிக்கக் குனிந்தான். அதற்குள் குயில் பறந்து சென்று, அரண்மனை சுவரில் உட்கார்ந்துகொண்டது.

"இளவரசி! என்னைவிட்டுப் போகாதே! என்னைவிட்டுப் போகாதே!" என்று கூச்சல் போட்டுக்கொண்டே, குயிலை பிடிக்க முத்து ஓடினான்.

அதற்குள், "இளவரசே! நான் வருகிறேன். வணக்கம்" என்று கூறிவிட்டு, குயில் பறந்து சென்றது.

(தொடரும்)

அடுத்த காமிக்ஸ்

விண்வெளி வீரர்

பிளாஷ்கார்டன்

தோன்றும்

உடைந்த விமானம்

விண்வெளிக்குச் சென்ற
பிளாஷ்கார்டனுக்கு
ஆபத்துக்குமேல் ஆபத்து!

விறுவிறுப்பான மர்மப் படக்கதை !
படிக்கத் தவறாதீர்கள் !!

நவம்பர் 1-ந்தேதி வெளிவருகிறது !

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)
Regd. No.
Registered as Newspaper in Sri Lanka

ஆசிரியர்களின் தேர்வே
அப்ஸரா ப்யூட்டி பென்சில்கள்